**O.S. 261/2015**

Date: 09.08.2024

Dw–1 – இசக்கி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்)**

5. வாதி எந்த ஆண்டு தாவா சொத்தில் வீடு கட்டினார் என்றால் 1982 அல்லது 1983ம் ஆண்டு இருக்கும். 2ம் பிரதிவாதி என்னுடைய மனைவி என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கே உள்ள வீட்டின் மாடியில் நானும், என் மனைவியும், தரைத்தளத்தில் என் மகனும், அவரது குடும்பமும் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். பி.சா.ஆ–4, 5 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள வீட்டிற்கு வடக்கு பார்த்த வாசல் உள்ளது என்றால் சரிதான். அந்த பி.சா.ஆ–4, பி.சா.ஆ–5 கண்ட வீட்டிற்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

6. பி.சா.ஆ–6 ஆவணத்தில் கண்ட சொத்து அதனை எழுதிகொடுத்த நபருக்கு எப்படி பாத்தியம் என்பது சம்பந்தமாக ஏதேனும் விபரங்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு பாத்தியப்பட்ட என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது. அது பட்டாபடி பாத்தியமா அல்லது பத்திரப்படி பாத்தியமா அல்லது பூர்வீக பாத்தியமா என்பது சம்பந்தமாக யாதொரு விபரமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்திற்கு பி.சா.ஆ–6 ஆவணம் தான் தாய் பத்திரம் என்றால் சரிதான். பி.சா.ஆ–6லும், அதற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்களில் வடபுறம் வீடு இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான், வீட்டுமனை என்றே சொல்லப்பட்டுள்ளது. நான் என் சொத்தில் தரைத்தளத்தை 2004லும், முதல் மாடியை 2014லும் கட்டினேன்.

7. பி.சா.ஆ–8 2005ம் ஆண்டு ஏற்பட்ட நிலையில் 2004ம் ஆண்டில் எவ்வாறு வீடு கட்டியதாக சொன்னேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 2005ம்

Sd/–Tr.P.Kumar,PDM(FAC) Sd/–இசக்கி

ஆண்டு வீடு கட்டியதை காட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால், என் கைவசம் உள்ளது. 2014ம் ஆண்டு தான் ஏற்கனவே இருந்த வீட்டை இடித்துவிட்டு வீடு கட்டினேன் என்றும், அவ்வாறு கட்டும்போது வாதியின் இடத்தை ஆக்கிரமித்து கட்டியதால் வாதி எங்கள் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, மாடி கட்டும்போதுதான் பிரச்சனை ஏற்பட்டது. வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் வாதிக்கு வா.சா.ஆ–4 வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

8. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் சரிவர அளக்கவில்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை சரிவர அளவீடு செய்யவில்லை என்பதை தெரிவித்து மீண்டும் சொத்தினை அளக்க உத்தரவிடக்கோரி மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தில் கண்டபடி தான் தாவா சொத்தும், என் சொத்தும் நிலையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடம் வா.சா.ஆ–6. பி.சா.ஆ–4 ஆவணத்தில் என் இடத்திற்கு கிழக்கே வாதி, ஐயம்பெருமாள் ஆசாரி மற்றும் எனக்கு பாத்தியப்பட்ட சுவர் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. 2014ம் வருடம் வாதிகளின் தென்பக்க சுவரை ஆக்கிரமித்து புதியதாக நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. 2014 ஆகஸ்ட் மாதம் மாடியிலும் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளின் வீட்டின் கைப்பிடி சுவரை ½ அடி அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்து மாடி கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரும் தனது அறிக்கையில் நான் வாதி வீட்டு சுவரை ஒட்டி கட்டியதால் தன்னால் அளக்க இயலவில்லை என்றும்,

Sd/–Tr.P.Kumar,PDM(FAC) Sd/–இசக்கி

ஆகையால் மாடியில் இருந்து அளந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை. தாவா சொத்தின் தென்பக்க சுவரில் சிறிய அளவில் ஓடை இருந்தது என்றும், அந்த ஓடையையும் நான் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே ராயப்பன் கடை இருந்தது என்றும், அதை இடித்து 2014 ல் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல.

10. நான் தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும், அதனை இடித்து அகற்ற கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2014 ம் ஆண்டில் நான் வீடு கட்டி 2015 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் எதிர்வழக்குரையிலோ, எனது நிரூபண வாக்குமூலத்திலோ 2004 ம் ஆண்டில் நான் தரைதளத்தை கட்டிவிட்டேன் என்பதை தெரிவித்து ஏதேனும் சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நான் 2004 ம் ஆண்டு எந்தவொரு வீடும் கட்டவில்லை என்பதால்தான் அது சம்பந்தப்பட்ட சங்கதியை நான் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நானும், என் மனைவியும் கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை

Sd/—இசக்கி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

Sd/-Tr.P.Kumar,PDM(FAC)
கூ.மா.உ.நீ.
அம்பாசமுத்திரம்.